*This Question Paper contains 16 printed pages.*
***(Part - A & Part - B)***

Sl.No. 0100061

# 07 (T)

**(MARCH, 2019)**

| પ્રશ્ન પેપરનો સેટ નંબર જેની સામેનું વર્તુળ OMR શીટમાં ઘટ્ટ કરવાનું રહે છે. Set No. of Question Paper circle against which isto be darken in OMR sheet. |
|---|
| **01** |

**Part - A : Time : 1 Hour / Marks : 50**

**Part - B : Time : 2 Hours / Marks : 50**

## (Part - A)

***Time : 1 Hour]*** ***[Maximum Marks : 50***

குறிப்பு :

1) **பகுதி A-யில் 50 வினாக்கள் (M.C.Q.) உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் கண்டிப்பாக விடையளித்தல் வேண்டும்.**
2) **01 முதல் 50 வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.**
3) **ஒவ்வொரு வினாவையும் கவனமாகப் படித்து, அதற்கான பதிலை O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.**
4) **சரியான பதிலைத் தெரிந்து, (A) O, (B) O, (C) O, (D) O, (●) வட்டத்தில் O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.**
5) **கேள்வி தாள் மேல் மிக வலது பக்கத்தில் அச்சிடப்பட்ட கேள்வி தாள் எண்ணிக்கை அமைக்க O.M.R. தாள் வழங்கப்படும் பத்தியில் எழுதியுள்ளார் வேண்டும்.**

---

1) ‘இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே’ எனப் பாடியவர் ____________.

(A) பாரதியார் (B) சுரதா

(C) பாரதிதாசன் (D) கவிக்கோ

2) மாணிக்கவாசகர் பாடல்கள் ____________ திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

(A) ஐந்தாம் (B) எட்டாம்

(C) நான்காம் (D) ஏழாம்

3) நன்றிக்கு வித்தாகும் ____________

(A) பண்பு

(B) அன்பு

(C) பாசம்

(D) நல்லொழுக்கம்

4) அறத்துப்பாலில் ____________ அதிகாரங்கள் இடம் பெற்றுள்ளன.

(A) 25

(B) 40

(C) 38

(D) 50

5) கணிமேதாவியாரின் காலம் ___________

(A) சங்க காலம்

(B) கடைச் சங்க காலம்

(C) இடைக்காலம்

(D) சங்கம் மருவிய காலம்

6) ‘பொன்தொழில் சிலம்பொன் றேந்திய கையள் கணவனை இழந்தாள்’ - இந்த அடிகள் இடம் பெற்ற செய்யுள் யாது ?

(A) விஷ்ணு புராணம்

(B) மணிமேகலை

(C) தல புராணம்

(D) சிலப்பதிகாரம்

7) ‘கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று வெள்வேற் கொற்றங் காண்’ - இந்த அடிகள் இடம் பெற்ற பாடல் யாது ?

(A) மணிமேகலை (B) திருக்குறள்

(C) சிலப்பதிகாரம் (D) தேவாரம்

8) ‘எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால் இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்’ - இது யார் கூற்று ?

(A) பாரதிதாசன் (B) பெரியார்

(C) பாரதியார் (D) பாவாணர்

9) ‘துடியன், நாயினன், தோல்செருப்பு ஆர்த்தபேர் அடியன், அல்செறிந் தன்ன நிறத்தினான்’ - இந்த இடிகளில் யாருடைய தோற்றம் வர்ணிக்கப் பட்டுள்ளது ?

(A) சுக்ரீவன்

(B) குகன்

(C) விபீடணன்

(D) வாலி

10) ‘வட்டி’ என்பதன் பொருள் யாது ?

(A) வருவாய் (B) பனையோலைப்பெட்டி

(C) செலவு (D) பணம்

11) ‘நல்’ என்னும் அடைமொழி பெற்ற நூல் ___

(A) அகநானூறு

(B) பரிபாடல்

(C) கலித்தொகை

(D) நற்றிணை

12) ‘அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்’
- யார் எழுதிய கடிதம் ?

(A) வ.உ.சி.
(B) டாக்டர் மு.வ.
(C) அறிஞர் அண்ணா
(D) பண்டித நேரு

13) ‘அளவைகள், நிறைகோல், மக்கள், ஆவொரு மேதி மற்றும்
உளஎலாம் அரசின் நாமம் சாற்றும் அவ் வொழுக லாற்றார்’
- இந்த அடிகள் இடம் பெற்ற பாடல் யாது ?

(A) கந்த புராணம்
(B) பெரிய புராணம்
(C) விஷ்ணுபுராணம்
(D) தல புராணம்

14) ‘தளர்ந்து வீழ் மகனைக் கண்டு தாயாரும் தந்தை யாரும்
உளம் பதைத்து உற்று நோக்கி உதிரம் சோர் வடிவும் மேனி’
- இந்த அடிகளில் தாய், தந்தை யார் யார் ?

(A) கோவலனும் மாதவியும்
(B) இராமனும் சீதையும்
(C) அப்பூதியடிகளும் அவர் மனைவியும்
(D) மாசாத்துவான், அவர் மனைவியும்

15) ‘இப்போது இங்கு அவன் உதவான்’ - யார் யாரிடம் கூறியது ?

(A) அப்பூதியடிகள் மகனிடம்
(B) அப்பூதியடிகள் தொண்டிரிடம்
(C) அப்பூதியடிகள் மனைவியிடம்
(D) அப்பூதியடிகள் திருநவுக்கரசரிடம்

16) 'நாற்கரணம்' - பொருள் எழுதுக.

(A) பூரிப்பு

(B) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

(C) அகம்பாவம்

(D) ஆணவம்

17) 'விண்ணப்பமுண்டு' - பிரித்து எழுதுக

(A) விண்ணப்பம் + உண்டு (B) விண்ண + முண்டு

(C) விண் + உண்டு (D) விண் + உண்டு

18) போலிப் புலவர்களின் தலையை வெட்டுபவர் யார் ?

(A) கபிலன் (B) வில்லிபுத்தூரன்

(C) ஒட்டக்கூத்தன் (D) ஔவை

19) 'உறா சுமை' - இலக்கணக் குறிப்பெழுதுக.

(A) செய்யுளிசை அளபெடை

(B) ஒற்றளபெடை

(C) இன்னிசை அளபெடை

(D) உயிரளபெடை

20) இல்லாரை எல்லாரும் _______ .

(A) இகழ்வர் (B) எள்ளுவர்

(C) உதவுவர் (D) சிரிப்பர்

21) உழைப்பில்லாத ஊதியம், நாணயம் இல்லாத இன்பம், அறமில்லாத வழிபாடு - இவற்றால் பயனில்லை என்று கூறியவர் யார் ?

(A) ஜவஹர்லால் நேரு (B) சர்தார் படேல்

(C) காந்தியடிகள் (D) கோகலே

22) 'பகவத் கீதை' - நூல்

(A) இந்து சமய நூல் (B) இஸ்லாமிய நூல்

(C) புத்த சமய நூல் (D) கிறித்துவ சமய நூல்

23) 'அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்'

- இந்த அடி இடம் பெற்ற பாடல் யாது ?

(A) பிரபந்தம்

(B) நற்றிணை

(C) தூது

(D) கலித்தொகை

24) 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' - பாடலை இயற்றியவர் யார் ?

(A) குலசேகர ஆழ்வார் (B) நம்மாழ்வார்

(C) கருடாழ்வார் (D) சக்கரத்தாழ்வார்

25) குலசேகரர் வடமொழியில் இயற்றிய நூல் யாது ?

(A) திருவியற்பா

(B) முகுந்தமாலை

(C) முதலாயிரம்

(D) பெரிய திருமொழி

26) 'அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த' - தான் தோன்றியதாகக் கூறியவர் யார் ?

(A) பெரியார் (B) மகாத்மா

(C) வள்ளலார் (D) அம்பேத்கர்

27) பத்தொன்பதாம் நூற்றாண்டை - என அறிஞர் கூறுவர்

(A) ஒளிறும் காலம்

(B) வீழ்ச்சிக் காலம்

(C) கற்காலம்

(D) தமிழின் மறுமலர்ச்சிக் காலம்

28) 'நந்திக் கலம்பகம்' யார் மீது பாடப் பெற்றது ?

(A) இரண்டாம் நந்திவர்மன்

(B) நந்தி மீது

(C) மூன்றாம் நந்திவர்ம பல்லவன்

(D) முதலாம் நந்திவர்மன்

29) செடிகளின் வெற்றி - உள்ளது

(A) காற்றில் (B) இலையில்

(C) மண்ணில் (D) பூவில்

30) 'கருத்துப் படம்' அமைக்கத் தொடங்கியவர் - என்பவர் ஆவார்

(A) வால்ட் டிஸ்னி (B) பிரான்சிஸ்

(C) எட்வர்டு (D) மைபிரிட்சு

31) திரைப்படம் எடுப்பதை விட - எடுப்பது கடினமான பணியாகும்

(A) கல்விப் படம் (B) விளக்கப்படம்

(C) கருத்துப் படம் (D) செய்திப் படம்

32) எம்.ஜி. இராமச்சந்திரனை மக்கள் - என அன்போடு அழைத்தனர்

(A) எழுச்சித் திலகம் (B) நடிப்புத் திலகம்

(C) மக்கள் திலகம் (D) நவரச நாயகன்

33) எம்.ஜி. இராமச்சந்திரன் - ஆண்டுகள் தமிழக முதல்வராகப் பணியாற்றினார்

(A) பத்தாண்டுகள் (B) பதினோராண்டுகள்

(C) ஏழு ஆண்டுகள் (D) ஐந்தாண்டுகள்

34) நாள்தோறும் கல்வியில் - உருவாகிக் கொண்டே வருகின்றன.

(A) கலைகள் (B) புதுப் புதுத் துறைகள்

(C) தொழில் நுட்பம் (D) விழிப்புணர்வு

35) தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை ?

(A) வேதியியல், இயற்பியல்

(B) விலங்கியல், தாவரவியல்

(C) உயிர்-தொழில் நுட்பத்துறை, நுண்ணியல் தொழில் நுட்பத்துறை

(D) கணிதவியல், பொறியியல் துறை

36) இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு - இருக்கும்

(A) எரிச்சலாய் (B) விளையாட்டாய்

(C) வேடிக்கையாய் (D) விந்தையாய்

37) 1918-இல் மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் - பேராசிரியராகப் பணியாற்றினார்

(A) வணிகவியல் (B) பொருளியல்

(C) அறிவியல் (D) பொறியியல்

38) 'வட்டமேசை மாநாடு' - ஆண்டு நடைபெற்றது

(A) 1915

(B) 1925

(C) 1920

(D) 1930

39) 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' - எனக் கூறும் நூல் யாது ?

(A) திருக்குறள் (B) இன்னிலை

(C) ஏலாதி (D) திருவருட்பா

40) 'நடுவரைசு' - தமிழைச் செம்மொழியாக அறிவித்த ஆண்டு -

(A) 1995 (B) 2004

(C) 2001 (D) 1998

41) ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ - என உலக மக்களை ஒருங்கிணைத்த பாடல் எது ?

(A) பரிபாடல் (B) கலித்தொகை

(C) புறநானூறு (D) பிள்ளைத் தமிழ்

42) பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்களுள் ஒன்று - இல்லாமை

(A) எழுத்துரிமை (B) வாக்குரிமை

(C) பேச்சுரிமை (D) சொத்துரிமை

43) அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் தலைகீழ் புரட்சி ஏற்படும் என்றவர் _______

(A) திரு.வி.க. (B) பெரியார்

(C) பாரதிதாசன் (D) காந்தியடிகள்

44) ‘முப்பால்’ - என்பது யாது ?

(A) அறம் (B) இன்பம்

(C) பொருள் (D) அறம், பொருள், இன்பம்

45) தொழிலைக் குறிக்கும் சொற்கள் - ஆகும்

(A) வினைச்சொற்கள்

(B) இடைச்சொற்கள்

(C) கடைச்சொற்கள்

(D) உரிச்சொற்கள்

46) இராமன் கடந்து சென்ற நதிக்கரை யாது ?

(A) சிந்து நதி (B) நர்மதா நதி

(C) பிரம்மபுத்திரா நதி (D) கங்கை நதி

47) குகன் ஆண்ட நகரின் பெயர் யாது ?

(A) சிருங்கிபேரம் (B) கங்கைக் கரையோரம்

(C) மறையோரம் (D) வேடர் நகரம்

48) பத்துப்பாட்டில் _______ நூல்கள் உள்ளன

(A) 12 (B) 08

(C) 06 (D) 10

49) 'நன்கலம்' - இலக்கணக் குறிப்பெழுது.

(A) உம்மைத்தொகை (B) உவமைத்தொகை

(C) பண்புத்தொகை (D) உருவகம்

50) வினையை - உயிராகக் கருதினர்

(A) ஆடவர்

(B) குழந்தை

(C) பெண்டிர்

(D) முதியோர்

# 07 (T)

**(MARCH, 2019)**

---

**(Part - B)**

***Time : 2 Hours]*** ***[Maximum Marks : 50***

குறிப்பு :

1) **ஒரு தெளிவான கை எழுத்து எழுது.**
2) **பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன - கேள்வி தாள் மற்றும் மொத்த** B 1 **முதல்** 21 **கேள்விகள் உள்ள.**
3) **அனைத்து கேள்விகள் உள்ளன உள் விருப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.**
4) **வலது பக்க எண்கள் கேள்விகளுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.**
5) **புதிய பக்கம் புதிய பிரிவை துவக்கவும்.**
6) **பகுவரிசை பராமரிக்கவும்.**

---

## SECTION - A

■ ஆறு வரிகளில் விடையளி :- **[8]**

1) மொழிக்குரிய சொவ்வியல் தன்மைகள் யாவை ?

2) கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

3) உழவுத் தொழில் குறித்து எழுதுக.

4) மணிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக :- [2]

5) கைதொழில் ஒன்றை கற்று கொள்.

6) பெண்கள் குடும்பத்தை பொறுப்புடன் நடத்த வேண்டுமெனவும், கடல் கடந்து செல்ல கூடாதெனவும் கூறி வந்தனர்.

கோடிட்ட இடங்களை நிரப்புக :- [2]

7) குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி ______.

8) தமிழ், மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் ______ ஆவார்.

## SECTION - B

■ ஐந்தாறு வரிகளில் விடையளி :- [6]

9) செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை ?

10) இறைவன் திருவடியை வணங்குகின்றவர் எத்தன்மையர் ?

11) பெரியாரைத் துணை கொள்வதன் சிறப்பு யாது ?

கீழுள்ள வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி :- [4]

12) கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.

13) வினா எத்தனை வகைப்படும் - அவை யாவை ?

ஒரு வரியில் விடையளி :- [3]

14) மூவிடங்கள் யாவை ?

15) சொல் என்றால் என்ன ?

16) அணி என்றால் என்ன ?

## SECTION - C

17) கொடுக்காட்டுள்ள பாடலின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடை எழுதுக :- [5]

சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் - அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம் - அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதரவுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்
பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதமை அற்றிடும் காணீர்

**வினாக்கள் :-**

a) எதனைச் சொல்லி தாழ்வென, மேலெனக் கொள்வார் ?

b) சாதிக் கொடுமைகள் நீங்க வழி யாது ?

c) எவரை மூடர் என்கிறார் ?

d) வையத்தில் பேதமை நீங்கிட வழி என்ன ?

e) மேலுள்ள பாடல்கள் எந்த இரு கருத்துக்களை அடிப்படையாய் கொண்டுள்ளது ?

OR

மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் திரண்ட கருத்தினை எழுதுக.

**18)** வள்ளலார் அருளிய பாடல்கள் பற்றியும் தமிழ்ப் பற்றுக் குறித்தும் விளக்கி எழுதுக. **[3]**

OR

பெரியாரைத் துணையாகக் கொள்வதால் வரும் சிறப்பு, பெரியார் துணையில்லாத வழி ஏற்படும் இழிவு - இவை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**19)** 'இன்றிளைப்' .......... எனத் தொடங்கி, 'பூவினிலே' என முடியும் 'நிற்க நேரமில்லை' ப் பாடலை அடி பிறழாமல் எழுதுக. **[5]**

OR

அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.

OR

வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

## SECTION - D

20) உன் பிறந்த நாள் விழாவில் உன்னுடைய உறவினர் அளித்த பரிசுப் பொருளைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. [4]

21) ஒன்றினைப் பற்றி 200 சொற்களில் கட்டுரை எழுதுக. [8]

a) காந்தியடிகளின் அறப்புரட்சி

b) உயர்தனிச் செம்மொழியின் சிறப்பு

c) மழை நீர் சேகரித்தல்